**செ. கு. எண்**: 276 **நாள்**: 10.08.2012

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 10.8.2012

சென்னை, எம்.எம்.டிஏ. காலனி, நூறடி சாலையில் 3.8.2012 அன்று இரு சக்கர வாகனம் ஒன்றின் மீது மாநகர அரசுப் பேருந்து மோதியதில் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த அயனாவரம், ஞானாம்பாள் கார்டன் 1-வது தெருவைச் சேர்ந்த திரு. ரவி என்பவரின் மகன் திரு. பாபு பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வந்த நிலையில், சிகிச்சைப் பலனின்றி 5.8.2012 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

மயிலாப்பூர், கச்சேரி ரோடு சந்திப்பில் லஸ் கார்னர் அருகே 5.8.2012 அன்று இரு சக்கர வாகனம் ஒன்றின் மீது மாநகர அரசுப் பேருந்து மோதியதில் இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து பயணம் செய்த அண்ணா நகர், சாந்தி காலனியைச் சேர்ந்த திரு. சந்திரசேகர் என்பவரின் மனைவி திருமதி ரேகா படுகாயமடைந்து மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கரூர் மாவட்டம், கரூர் வட்டம், கரூர் பேருந்து நிலையம் அருகில், 6.8.2012 அன்று ஈரோடு மாவட்டம், சாலைப்புதூர், கொல்லம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. குப்பன் என்பவரின் மகன் திரு. மாசி மீது அரசுப் பேருந்து மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இச்சாலை விபத்துகளில் அகால மரணமடைந்த திரு. பாபு, திருமதி ரேகா மற்றும் திரு. மாசி ஆகியோரின் குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இத்துயரச் சம்பவங்களில் காலமான திரு. பாபு, திருமதி ரேகா மற்றும் திரு. மாசி ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**